# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

AIBEA - AIUBEA உடன் இணைக்கப்பட்டது

சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை - 600 001

தொலை பேசி : 044-45000032, 9677048718 மின்அஞ்சல் : ubeutn@gmail.com

இணையதளம் : bankubeutn.in


சுற்றறிக்கை எண்:128:2022 24.09.2022

அன்பார்ந்த தோழர்களே !

## வேண்டுகோள்

நமது வங்கியின் நங்கநல்லூர் கிளையில் தற்காலிக ஊழியராகப் பணியாற்றிவந்த தோழர்.**R.ரவிக்குமார்** அவர்கள் கடந்த 13.09.2022 அன்று காலமானார் என்ற தகவலை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர் தனது 38வது வயதில் உடல் நலக்குறைவின் காரணமாக அகால மரணமடைந்தது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தோழர்.ரவிக்குமார் அவர்கள் வங்கிப்பணியில் தற்காலிக ஊழியராகச் சேர்ந்து 10 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. அவர் ஒரு மாற்றுத்திறனாளியும் ஆவார். அவருக்கு திருமணமாகி 4 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. மேலும், அவரது துணைவியார் தற்சமயம் கர்ப்பிணியாகவும் உள்ளார்.

தோழர்.ரவிக்குமார் அவர்களது மொத்த குடும்பமும் அவரது வருமானத்தையே நம்பி இருந்தது. அவரது குடும்பம் தற்சமயம் எந்த ஒரு வருமானமும் இல்லாமல் நிர்கதியாகவுள்ளது. அவர் தற்காலிக பணியாளராக இருந்த காரணத்தினால், அவருக்கு வங்கியிலிருந்து எந்தவிதமான உதவியும் கிடைப்பதற்கு வழி இல்லை. நமது சங்கத்தின் சார்பாக உடனடி உதவியாக ரூ.10,000/- அன்றே வழங்கப்பட்டது. இந்தச் சூழலில், இந்த தொகை மிகவும் குறைவு.

இந்த இக்கட்டான சூழலில், அவருடன் பணியாற்றும் வங்கி ஊழியர்களாகிய நாம், நம்மால் இயன்ற தொகையை அக்குடும்பத்திற்கு வழங்கினால், அது அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நாம் வழங்கும் சிறிய தொகையும், நிர்கதியாகவுள்ள அந்த குடும்பத்தாருக்கு ஒரு ஊன்றுகோலாக அமையும்.

நமது தோழர்கள், தங்கள் பங்களிப்பை நமது சங்க கணக்கு எண்: 332602010440540ல் செலுத்தி, தங்கள் சமூக கடமையை நிறைவேற்றிட கேட்டுக் கொள்கிறோம்.

அ.சிதம்பரம்

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்